முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 24.06.2025.அ.வ.எண். 369/2021. வா.சா.1. தாரணி, க/பெ. சதீஸ்குமார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இந்த வழக்கில் 1 ம் வாதி எனது அம்மா, 2 ம் வாதி எனது சகோதரி என்றால் சரிதான். 1 ம்பிரதிவாதி யார் என்றால் எனது அப்பாவிற்கும் ஒரு ஜெயந்தி என்பவருக்கும் பிறந்த மகன் ஆவார். 1 ம் பிரதிவாதி நித்திய சரணுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 20 –21 இருக்கும் சரியாக தெரியவில்லை. இறந்துபோன எனது தகப்பனார் பழனிச்சாமியும் எனது அம்மாவும் கருத்து வேறுபாட்டின் காரணமாக பிரிந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா பழனிச்சாமிக்கும் 4 ம் பிரதிவாதி ஜெயந்திக்கும் 03.11.2000 த்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல.

2) 1ம் பிரதிவாதியின் வயது 20 –21 இருக்கும் என்ற நிலையில் 4 ம் பிரதிவாதிக்கும் எனது தகப்பனாருக்கும்சுமார் 22 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் அவ்வாறு சொல்கிறார்கள். 2009 ம்ஆண்டில் 4 ம் பிரதிவாதியும் எனது தகப்பனார் பழனிச்சாமியும் சேர்ந்து சொத்துக்களை கிரயம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களில் எனது தகப்பனாரின் ஆதார் கார்டை இந்த தாவாவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா நடத்தி வந்த கிளினிக்கின் பெயர் என்ன என்றால் ஜெயம் கிளினிக் ஆகும்.

3)இறந்து போன எனது தகப்பனார் பழனிச்சாமியின் வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பாவின் ஆதார் கார்டு, வாக்காளர் அட்டை, பாஸ்போர்டு ஆகியவற்றில் எனது தகப்பனாரும், 4 ம் பிரதிவாதியும் சேர்ந்து வாழ்ந்த விலாசம் தான் மேற்படி

ஒப்பம்/–( R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

ஆவணங்களில் உள்ளது என்றும்அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. குடும்ப அட்டை, திருமண பதிவு சான்று ஆகியவற்றில் நாங்கள் குடியிருந்து வந்த விலாசம் தான் உள்ளது. எனது தாயாரை விட்டு பிரிந்து வாழ்ந்து வந்ததால் தான் 4 ம்பிரதிவாதியும்எனது தகப்பனாரும்சேர்ந்து சொத்துக்கள் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதியின் பெயரில் இருந்த அன்பினால் தான் எனது தகப்பனார் கிளினிக்கிற்கு ஜெயம்கிளினிக் என பெயர் வைத்தார் என்றால் சரியல்ல.

4) எனது தகப்பனார் பழனிச்சாமி எனது தாயாரை விட்டு பிரிந்து பல ஆண்டுகள் ஜெயந்தியுடன் வாழ்ந்து வந்ததால் 4ம் பிரதிவாதியும் எனது தகப்பனாருக்கு சட்டப்படியான வாரிசாவார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாரிசு சான்று வழங்கப்படும் நிலையில் 1, 4 பிரதிவாதிகளையும் வாரிசுகளாக சேர்த்துதான் சான்று வழங்கப்படும் என்றால் சரியல்ல., 4 ம் பிரதிவாதியை விடுத்து வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்துள்ள இந்த தாவா ஏற்புடையது என்றால் சரியல்ல அதனால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-( R.சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.